


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தமிழ் வளர்ச்சித்துறையின் இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் முன்னிலையில், அனைத்து அரசு அலுவலர்களுடன், தமிழ் ஆட்சிமொழி செயலாக்க கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (29.07.2016) நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, தமிழ்வளர்ச்சி துறை துணை இயக்குநர் (திருநெல்வேலி மண்டலம்) முனைவர். க. பசும்பொன், துணை இயக்குநர் (தூத்துக்குடி, நாகர்கோவில்) முனைவர் க. சிவசாமி ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 485/2016 நாள்: 29.07.2016

# பத்திரிக்கை செய்தி

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தமிழ் ஆட்சிமொழி செயலாக்கம் குறித்த ஆய்வு இரண்டு நாட்கள் நடைபெற்றது. இந்த ஆய்வின் முடிவில் தமிழ் ஆட்சிமொழி செயலாக்க கலந்தாய்வு கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் 29.07.2016 அன்று பிற்பகல் 3.00 மணி அளவில் சென்னை தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் திரு. கோ. விசயராகவன் அவர்கள் முன்னிலையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ. இளங்கோ, நாகர்கோவில் & தூத்துக்குடி உதவி இயக்குநர் முனைவர் திரு. க. சிவசாமி, மற்றும் திருநெல்வேலி & மதுரை துணை இயக்குநர் முனைவர் க. பசும்பொன் ஆகியவர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அலுவலகங்களில் தமிழ் பயன்பாட்டினை அதிகப்படுத்தவும் தமிழில் கோப்புகள், பதிவேடுகள் மற்றும் தபால்கள் பராமரிப்பது 100 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் எனவும் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.